## ஸ்ரீ ஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகள் அவர்களின் 41 ஆவது ஜயந்தி விழா

அன்புடையீர்!

நமது ஸநாதன தர்மத்தின் ஆணிவேர் குரு சிஷ்ய உறவு. இது ஒரு ஆன்மிக ஆனந்த அனுபவம். தான் பெற்ற ஆன்ம ஞானத்தைக் குரு தகுதியான சீடனுக்குத் தீக்ஷையாலும் உபதேசத்தாலும் அருள்கிறார். சீடனை ஞான நாட்டமுடையவனாக்குகிறார். குருவருள் பெற்ற சீடன் அல்லும் பகலும் குரு பெற்ற உயர்ந்த ஞானானுபவத்தைத் தானும் பெறப்பாடுபடுகிறான்.

பணிவு, நம்பிக்கை, பக்தி, தொய்விலாத பணி, அடக்கம் இவற்றால் சிஷ்யன் குருவைக் கவர்ந்து குருவருள் பெறுகிறான். குருவின் ஞானமும், அவரது ஞானப்பிரதர்சனங்களும் இவனுள் பெருகுகின்றன. பரமாத்மா நாராயணரிடமிருந்து ஆரம்பித்து, பிரும்மா, வசிஷ்டர், சக்தி, பராசரர், வியாஸர், சுகர் என்று பிதா, புத்ர வரிசையிலும் தொடர்ந்து, கௌடபாதர், கோவிந்த பகவத் பாதர், ஸ்ரீசங்கரர் என்று குரு சிஷ்ய பரம்பரையிலும் வந்த அத்வைத ஆசார்யர்களின் பரம்பரை நமது ஸ்ரீமடத்தில் தொய்விலாது தொடர்ந்து 2500 வருடங்களுக்கும் மேலாக வந்து கொண்டிருக்கிறது.

பேதம் நீக்கி போதம் அருளும் வேத வேதாந்த ஞானம் நமது பீடத்தில் ஸ்ரீசங்கரர் துவங்கி இன்றைய 70–ஆவது பீடாதிபதியாகத் திகழும் ஸ்ரீசங்கர விஜயேந்த்ரர் வரையில் ச்ருதி மாறாமல், அருள்மணம் குறையாமல் விளங்குகிறது. அருள் மணத்தின் ஞானவீச்சாகத் திகழும் ஸ்ரீ ஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகள் அவர்களின் 41–ஆவது ஜயந்தி மஹோத்ஸவம் ஜகத்குரு ஸ்ரீஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகள் அவர்கள் அருளாணையின் வண்ணம் கடைசி பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள நிகழ்ச்சி நிரலின் படி 20.02.2009 வெள்ளி முதல் 23.02.2009 ஞாயிறு முடிய நான்கு தினங்கள் காஞ்சீபுரம் நமது ஸ்ரீமட வளாகத்தில் நடைபெற இருக்கின்றன. பக்தர்கள் அனைவரும் வந்திருந்து, விழா நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டு ஸ்ரீசரணர்களின் அருளுக்குப் பாத்திரர்களாகும்படிக் கேட்டுக் கொள்கிறோம்.

இங்ஙனம்
என்றும் ஸ்ரீமடத்தின் பணியில்

ப. நீலகண்ட ஐயர்
ஸ்ரீகார்யம் & ஏஜண்ட்

மார்க்கசிரசுக்லபஞ்சமி
ஸ்ரீசாங்கர ஸம்வத்ஸரம் 2518

## 41st Jayanthi Celebrations of His Holiness Sri Sri Sankaravijayendra Saraswathi Swamigal

Dear Devotees,

The guru-sishya tradition, a spiritual relationship in our time-honoured Sanatana Dharma, is the basis of our culture. The knowledge of the Divine Self experienced by the Guru is transmitted to a deserving disciple through teaching and grace which transforms him knowledge savvy and he strives hard day and night to realize and experience the knowledge of the self.

The respect, commitment, devotion and obedience of the disciple and the selfless service to the teacher fetch him with the subtle knowledge and in due course the disciple embodies the knowledge of his Guru. The esoteric wisdom and the meditation techniques of the Guru begin to flow into him.

Thus the divine knowledge flowed from the Adi Guru Lord Narayana to His son Brahma, from Brahma to His son Vasishta, from Vasishta to his son Sakthi, from Sakthi to his son Parasara, from Parasara to his son sage Vyasa, from Vyasa to his son Suka, from Suka to his disciple Gowdapadacharya, from Gowdapada to Sri Govinda Bhagawadpada, from Govinda Bhagawadpada to Sri Shankara and from Sri Shankara to till date the Vedic knowledge flows through uninterrupted succession of Guru sishya parampara for more than 2500 years in our Sri Kanchi Kamakoti Peetam.

The descendents of our Peetam from Sri Adi Sankaracharya to the present Sri Sri Sankara Vijayendra Saraswathi Swamigal are srotriyas, erudite scholars of Vedic scriptures and imparting the traditional way of life, sampradaya pravartakas, brahmanishtas, established in Brahman who have realized the oneness of Brahman in everything. Our Acharyas, though liberated from the bondages of worldly life, ever strive for the liberation of Their disciples.

With the benign blessings of His Holiness Sri Sri Jayendra Saraswathi Swamigal, the jayanthi celebrations are to be celebrated from 20th February 2009 as per the schedule given in the last page.

All devotees and disciples of Sri Kanchi Kamakoti Peetam are requested to participate in all the functions and receive the blessings of the Acharyas and Sri Maha Tripurasundari Sametha Sri Chandramouleeswara Swami.

Ever in the Service of Srimatam

P. Neelakanta Aiyar
Srikaryam & Agent

Margasira sukla panchami
Sri Sankara samvatsaram 2518